**OS.NO: 117/2024**

**PW :2** சதாசிவம் த/பெ. துக்காராம்

நாள் : 26.08.2025

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:

எனது பெரியப்பாவிற்கு 1969 ம் ஆண்டில் தான் திருமணம் நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். எனது பெரியப்பா சொத்து வாங்கும் சமயத்தில் தபால் துறையில் வேலை செய்யவில்லை. இந்த விவரம் எனக்கு என்னுடைய தந்தை கூறிதான் தெரியவந்தது. என்னுடைய அப்பாவை இந்த வழக்கில் நான் விசாரிக்கபோகிறேனா என்றால் தேவைபட்டால் விசாரிப்பேன். நான் கூறுவது என்றும் எனது பெரியப்பா 1965 லேயே தபால் துறையில் வேலைக்கு சென்று விட்டார் என்று சொன்னால் தவறு. அவர் வேலைக்கு சென்றார் என்பதை ஒப்புக்கொண்டால் அவருடைய சுய சம்பதியத்தில் வாங்கியதாக முடிவு செய்யப்படும் என்பதால் அதனை மறுப்பதற்காக நான் 1974ல் எனது பெரியப்பா வேலைக்கு செல்லவில்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல மேற்படி சொத்துகள் கூட்டு குடும்பத்தில் கிடைக்கபெற்ற வருமானத்தில் தான் எனது பெரியப்பா கிரையம் பெற்றார். கூட்டு குடும்பத்தில் என்னென்ன வருமானம் வந்தது பற்றிய விவரங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் விவசாயம் தான் செய்யப்பட்டது அதை தவிர மற்ற சொத்துக்களில் கிடைக்கபெற்ற வருமானத்தை வைத்து தாவா சொத்து கிரையம் பெறப்பட்டது. வாசாஆ.1 ன் உடைய கிரைய தொகை ரூ.4000/- அதில் யார் யார் எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்பதை பற்றி எனக்கு தெரியுமா என்று சொன்னால் எல்லோருடைய வருமானத்தையும் சேர்த்து தான் கிரையம் பெறப்பட்டது. தாவாசொத்தை

கிரையம் பெற்ற சமயத்தில் தனித்தனி குடும்பமாக தான் வாழந்து வந்தார்கள் என்றும் அதானல் நான் கூறுவது போல் கூட்டு குடும்ப வருமானத்தில் தாவா சொத்தை கிரையம் பெற்றதாக கூறுகின்ற விவரம் தவறு என்று சொன்னால் சரியல்ல. 1980ல் தான் எனது தாத்தா வின் அறிவுரையின் பேரில் தனிக்குடித்தனம் சென்றதாக சாட்சி கூறினார். 1980ல் நாங்கள் அனைவரும் கூட்டு குடும்பமாக வாழ்தார்கள் என்பதை ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கூறுவது போல் எந்த ஆவணமும் இல்லை என்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய அப்பா 26.02.2018 அன்று இந்திய அஞ்சல் துறைக்கு ஒரு கடிதத்தை ஏழுமலை பிள்ளை எப்போது வேலைக்கு சேர்ந்தார், பணியில் சேருவதற்கு அசைய சொத்தின் பதவு தேவையா மற்றும் பணிப் பதிவேட்டின் பதிவு ஆகியவைகளை கோரி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலமாக தகவல் கோரியிருந்தார் என்றால் சரிதான். அதற்கு அஞ்சல் துறையில் ஒரு பதில் அனுப்பபட்டுள்ளது என்றும் அதில் எனது பெரியப்பா 24.12.1976 அன்று பணியில் சேர்ந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது அந்த தேதி அவர் கோவிந்தச்சேரி குப்பம் தபால் நிலையத்தில் பணியில் சேர்ந்தார் என்றும் அதற்கு முன்பு எந்த தேதியில் தபால் துறையில் சேர்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் முதன்முதலில் கோவிந்தச்சேரி குப்பம் தபால் நிலையத்தில் தான் எனது பெரியப்பா பணியில் சேர்ந்தார் அதற்கு முன்பாக வேறு எந்த தபால் நியலைத்திலும் பணியில் சேரவில்லை. இந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் எனது தந்தை என்னிடம் அதைப்பற்றி கூறியுள்ளார். ஆனால் ஆவண ரீதியாக மேற்படி கடிதம் மூலம் தெரிந்துக்கொண்டேன். பிரதிவாதியின் தந்தை பானாவரம் தபால் நிலையத்தில் 1965 லேயே வேலையில் சேர்ந்து விட்டார் என்று

சொன்னால் சரியல்ல. மேலும் பணிப்பதிவேட்டை பராமரிக்கவில்லை என்று அந்த பதிலில் கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பொதுவாக ஒரு சொத்திற்கு பத்திரம் யார் பெயரிலே உள்ளதோ அவர் பெயரில் தான் பட்டா வழங்கப்படும் என்று சொன்னால் சரிதான் பிறகு சாட்சி ஆவணம் யார் வசம் உள்ளதோ அவர் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்படும் என்றும் கூட்டு குடும்ப சொத்து என்பதால் எனது தாத்தா பெயரில் தான் பட்டா வழங்கப்பட்டது. எனது தாத்தா பெயரில் UDR ல் வழங்கப்பட்ட பட்டா தவறு என்று DRO வால் கூறப்பட்டது என்று சொன்னால் அதை DRO கவனிக்கவில்லை அதற்கு முன்பாகவே எனது தாத்தா பெயரில் தான் பட்டா வழங்கப்பட்டது. அந்த பட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் எனது தாத்தா பெயரில் வழங்கப்பட்ட பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் கூறுகின்ற பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய பெரியப்பா தனியாக மாடுகள் வைத்திருந்தாரா என்றால் இல்லை. தபால் துறையில் வந்த வருமானத்தை வைத்தும் பசு மாடுகளின் மூலம் வந்த வருமானத்தை வைத்தும் எனது பெரியம்மாவின் நகைகளை விற்றும் கிடைத்த வருமானத்தின் மூலமாக தான் தாவா சொத்தை எனது பெரியப்பா கிரையம் வங்கினாரே தவிர எனது தந்தையோ எனது தாத்தாவோ தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு எந்தவிதமான பண உதவியும் செய்யவில்லை என்று சொன்னால் அது தவறு. UDR பட்டா 1983 அல்லது 1984 ல் வழங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். 1980ல் பாகப்பிரிவினை நடந்தாக நான் கூறுவது உண்மையாக இருக்கும் பட்சத்தில் 1984ல் எப்படி எனது தாத்தா பெயரில் மொத்த சொத்திற்கும் பட்டா வழங்கப்பட்டிருக்கும் என்று சொன்னால் வாய் சொல்லாக பாகம் பிரித்து

கொடுத்தார் அதனால் அவர் உயிருடன் இருந்த வரையில் மொத்த சொத்திற்கும் பட்டா எனது தாத்தா பெயரில் வழங்கப்பட்டது அந்த விவரம் அனைவரும்கும் தெரியும். ஆகையால் எனது தாத்தா உயிருடன இருந்த வரையில் வாய்ச்சொல் பாகப்பிரிவினை அமலுக்கு வரவில்லை என்று சொன்னால் நான் அவ்வாறு கூறிவில்லை அவர் உயிருடன் இருந்தவரை எனது தாத்தா பெயரில் பட்டா இருந்தது என்று தான் கூறினேன். எனது தாத்தா இறந்த பிறகு எல்லோரும் சேர்ந்துகொடுத்த மனுவின் பேரில் தான் எனது தந்தை பேயருக்குதம் எனது பெரியப்பா பெயருக்கும் கூட்டு பட்டா வழங்கப்பட்டது. பௌத்தியம் அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டாதா அல்லது மனுவின் பேரில் பட்டா வழங்கப்பட்டதா என்றால் வாரிசு அடிப்படையில் எனது தாத்தா இறந்த பிறகு எனது தந்தை பெயரிலும் எனது பெரியப்பா பெயரிலும் கூட்டாக பட்டா வழங்கப்பட்டது. மேற்படி விவரத்தை தான் வட்டாட்சியரும் RDO உம் அவருடைய உத்தரவில் கூறியுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி விளக்கத்தின் அடிப்படையில் பட்டா கொடுத்தது தவறு என்று தான் DRO அவருடைய உத்தரவில் பத்திரம் எனது பெரியப்பா பெயரில் இருக்கும்போது கூட்டாக பட்டா கொடுத்தது தவறு என்று சொன்னால் அது தவறு. நான் என்னுடைய பிராதிலும், பிரமாண வாக்குமூலத்திலும் வாசாஆ.11 அடிப்படையில் 205/1406 தேதி.12.08.1996 இதில் கொடுத்த பதிலில் நான் கோரிய பட்டா மாற்றம் உத்தரவு நகல் அவ்வலுவலகத்தால் பராமரிக்கபடவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த மனுவை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தான் அந்த மனுவை துக்காராமும் எனது பெரியப்பாவும் சேர்ந்து கொடுத்தார்களா இல்லை எனது தந்தை மட்டும் தனியாக கொடுத்தாரா என்ற விவரம் தெரிய வரும் என்று சொன்னால் அதை பற்றி விவரம் என் தந்தைக்கு தான் தெரியும். UDR பட்டாவில் தாவா

சொத்தின் பட்டா எண் என்ன என்று கேட்டால் பட்டா எண்.23. அதன் பிறகு எனது தந்தை பெயரிலும் எனது பெரியப்பா பெயரிலும் கூட்டாக வழங்க்கிய பட்டா எண் என்ன என்று கேட்டால் அதே பட்டா எண் தான். பட்டா எண். 1503 எப்படி உருவானது என்றால் எனது தந்தைக்கு கிடைக்கபெற்ற பாகத்தில் எனது தந்தையும் அக்காவும் சேர்ந்து எனது பெயருக்கு சொத்தை செட்டில் மென்ட் பத்திரம் எழுதி கொடுத்ததன் அடிப்படையில் எனது பெயருக்கு வழங்கப்பட்டது. எனது பெரியப்பா தபால் துறையில் பணிபுரிந்த போதிலும் அவர் 8 வகுப்பு வரை தான் படித்திருந்தார் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது என் தந்தைக்கு தான் தெரியும். எனது பெரியப்பாவிற்கு படிப்பறிவு இல்லாததால் UDR பட்டா வழங்கப்பட்ட விவரம் பற்றி அவருக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் எனது பெரியப்பாவால் எந்த மனுவையும் அவரால் கொடுக்க முடியாமல் போய்விட்டது என்று சொன்னால் சரியல்ல. அவருக்கு அனைத்து விவரங்களும் தெரியும். UDR பட்டா எனது தாத்தா பெயரில் வழங்கியது தவறு என்று முதலில் மனு கொடுத்தது 3-ம் பிரதிவாதி என்று சொன்னால் சரிதான். அந்த மனுவின் அடிப்படையில் தான் வட்டாட்சியரும் RDO உம் விசாரணை நடத்தி பிறகு DRO உத்தரவு பிறப்பித்தார் என்று சொன்னால் என்னை விசாரிக்கவில்லை. அந்த விசாரணையில் எனது தந்தை வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். DRO உத்தரவு செல்லாது என்றும் அவர் ஒழுங்காக விசாரிக்கவில்லை என்று நான் கூறுகின்ற விவரம் தவறு என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உத்தரவின் அடிப்படையில் எனது பெரியப்பாவின் வாரிசு தாரர்களின் பெயரில் பட்டா எண். 1972 பட்டா மாற்றம் செய்யப்பட்ட விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வருவாய் துறையில் தவறுதலாக UDR பட்டா எனது

தாத்தா பெயரில் வழங்கப்பட்டதை தெரிந்த பிறகு தான் உரிய நடவடிக்கை மேற்கொண்டு அவர்கள் செய்த தவறை சரிசெய்து எனது பெரியப்பா வாரிசு தாரர்களின் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது தவறு. நான் எனது தந்தை மற்றும் பெரியப்பா பெயரில் வழங்கபட்ட கூட்டு பட்டாவை சாதகமாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.08.28 15:35:12 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.